TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 JUL 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1970 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினரும் அமைச்சருமான திரு. எஸ். இராமநாதன் அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1937-லிருந்து 1939-வது ஆண்டு வரை மாயூரம் பொதுக் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராகவும், பொதுச் செய்தித் துறை அமைச்சராகவும் இருந்த திரு. எஸ். இராமநாதன் அவர்கள் 9—3—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இப் பேரவையின் நிகழ்ச்சியைப் பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கின்றேன்.

பேரவை காலை 9-15 வரை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் காலை 9-15 மணியளவில் கூடியது.

(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

வட்ட மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகள்

*369 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட்ட மருத்துவ மனைகளில் எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகளைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எக்ஸ் கதிர்வீச்சுக் கருவிகள் தாலுக்கா தலைமை மருத்துவ நிலையங்களில் படிப்படியாக நிதி நிலையைப் பொருத்து நிறுவப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகள் மருத்துவ நிலையங்களில் மிக அத்தியாவசியமாக இருக்கிறது. அது மக்களுக்கு மிகவும் தேவையாக இருப்பதினால் உடனடியாக அரசாங்கம் எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இந்தப் பிரிவுகளைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யுமா? படிப்படியாக அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படிப்படியாக என்று இல்லாமல் உடனடியாக எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இப் பிரிவுகளைத் தொடங்க என்ன திட்டம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படிப்படியாகத் தொடங்குவதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறைதான். அப்படி உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றால் ஏராளமான நிதி வேண்டும். 1967ஆம் ஆண்டில் மருத்துவ பொதுநலத் துறை இயக்குநர் அவர்கள் ஒரு திட்டம் கொடுத்தார்கள். அதில் 11 வட்டத் தலைநகர்களில் இப்படிப்பட்ட கதிர் வீச்சுக் கருவிகளை வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. விழுப்புரம், செய்யாறு, ஸ்ரீபெரும்புதூர், பட்டுக்கோட்டை, போடிநாயக்கனூர், காரைக்குடி(?) கோத்தான், திருவரங்கம், ஸ்ரீவைகுண்டம், நாமக்கல், தாராபுரம், பத்மநாபபுரம் என்று தாலுகா தலைநகர்களில் முக்கியமான 11 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக 1968–69-ல் ஆறு இடங்களில் வைக்கப்பட்டது. பட்டுக்கோட்டை, காரைக்கோத்தான், நாமக்கல், தாராபுரம், ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டது. 1969-70-ல் விழுப்புரம், செய்யாறு, திருவரங்கம், ஸ்ரீபெரும்புதூர், போடிநாயக்கனூர் என்ற ஐந்து இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எந்த எந்த இடங்கள் என்பது இனிமேல்தான் திட்டமிடப்பட வேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தாலுகா ஹெட் குவார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரிகளில் ஒரு ஆண் டாக்டரையும் ஒரு பெண் டாக்டரையும் போடுகிறார்கள். இந்த இரண்டு டாக்டர்களில் ஒருவர் சர்ஜரி தெரிந்தவராக இருக்க வேண்டும், ஒருவர் பிஸிஷனாக இருக்க வேண்டும். அப்படி ஒருவர் சர்ஜரி தெரிந்தவராகவும் ஒருவர் பிஸிஷனாகவும் இருந்தால்தான் அந்த எக்ஸ்ரே கருவிகளைப் பயன்படுத்தி ஆபரேஷன் போன்ற வேலைகளுக்கு அவர்கள் பயன்படுவார்கள் என்ற காரணத்தினால் அப்படி சர்ஜரி தெரிந்த ஒருவரையும் பிஸிஷியன் ஒருவரையும் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எக்ஸ் கதிர் வீச்சுக் கருவிகள் பொருத்தப்படுகிறது என்பதால் அதை இயக்குவதற்கு ஏற்ற அளவிற்குத் திறமை படைத்தவர்கள்தான் அங்கு டாக்டர்களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. என். வரதராஜன் : திண்டுக்கல் போன்ற மாவட்ட மருத்துவ மனைகளில் மிக முக்கியமான ஈ.என்.டி. போன்ற பிரிவுகள் இல்லை. ஆகவே குறைந்தபட்சம் மாவட்ட மருத்துவ மனைகளி

லாவது இது போன்ற குறைந்த பட்ச ஏற்பாடுகளோ அல்லது அபி விருத்தியை மேற்கொள்ள அரசாங்கத்திலிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர் அவர்கள் இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். கூடுமான வரையில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் எல்லாப் பிரிவுகளும் படிப்படியாக நிறுவப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து முதலாவது வருடத்தில் 11 இடங்களிலும் இரண்டாவது ஆண்டில் 6 இடங்களிலும் அதற்கு அடுத்த ஆண்டில் 5 இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த ரீதியில் போனால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு ஒரு நூற்றாண்டு ஆகிவிடும். விஞ்ஞானம், மருத்துவம் இவை வளர்ந்துவரும் இக் காலத்தில் இவை சாதாரணத் தேவைகள்தான். ஆகவே விரைவில் எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் மிக அவசியமான இப்பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதல் வருடத்தில் 11 என்று திட்டம் தீட்டப்பட்டு அதுதான் 6, 5 என்று பிரித்துத் தரப்பட்டிருக்கிறது, 1968-69-ல் 6-ம், 1969-70-ல் 5-ம் என்று. எதுவும் இல்லாத இடத்தில் இதையாவது தொடங்குகிறோமே என்பதைக் கவனிக்க வேண்டும். நூற்றாண்டுக் காலம் ஆகிவிடும் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கதிர் வீச்சுக் கருவிகள் எல்லாம் ஒரு சூழ்நிலையில் இருந்து மெல்ல மெல்ல தொடங்கப்பட்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக 6, 5 என்று 11 இடங்களில் என்றிருக்கிறது. படிப்படியாகத்தான் நாம் போக வேண்டும். நிதி நிலை சிறிது அதிகமாகச் சேருமானால்—நானும் அதிகமாகத்தான் கேட்டுக்கொண்டு வருகிறேன்—பொது நலத் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் நல்லது. ஆகவே ஒன்றும் இல்லாத இடத்தில் இவ்வளவாவது செய்யப்பட்டிருக்கிறதே என்று மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம். நீண்ட காலம் ஆகாது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Employees of Madras Institute of Technology.

*370 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(a) whether any representation was made to the Hon. Minister for Education by the Employees of the Madras Institute of Technology at Chromepet, regarding the non-implementation of revised scales by their management; and

(b) if so, the action taken by the Government?